**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,திருப்பூர்**

**முன்னிலை : திருமதி. A. சுபஸ்ரீ** L.L.M.,
**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருப்பூர்.**

**2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் செவ்வாய்கிழமை**
**திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி திங்கள் 10ம் நாள்**

**இ.ம.எண்.169/2026**
**இன்**
**அ.வ.எண்.56/2016**

1. சரசு
2. சரவணன் ..மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள்

/எதிர்/

1. தங்கமணி (இறப்பு)
2. வெங்கடாசலம் ..எதிர்மனுதாரர்கள்/வாதிகள்
3. மஞ்சுளா
4. சுமதி
5. மல்லிகா ..எதிர்மனுதாரர்கள்/5,6 பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 12.03.2026ம் தேதியன்று என் முன்பு இறுதியாக விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.R.சோமசுந்தரம் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ஆனந்தன் அவர்கள் முன்னிலையாகியும், நிகழ்த்திய இருதரப்பு வாதங்களை கேட்டறிந்தும், ஆவணங்களை நன்கு பரிசீலனை செய்தும், இதுநாள் வரை என் ஆய்வில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**உத்தரவு**

அசல் வழக்கில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி வேண்டி உரிமையியல் நடைமுறை சட்டம், பிரிவு 8 விதி 9ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்** :

**2.1** மனுதாரர்கள் அசல் வழக்கில் 1,2 பிரதிவாதிகள். அசல் வழக்கானது பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் 21.03.2025ம் தேதியன்று மனுதாரர்கள் தரப்பில் கூடுதல் எதிரவழக்குரை தாக்கல் செய்ய அளிக்கப்பட்டிருந்த வாய்ப்பு நீதிமன்றத்தால் முடிக்கப்பட்டது. தவிர்க்க முடியாத காரணத்தினாலும், தகுந்த ஆவணங்கள் இல்லாததாலும் மனுதாரர்களால் குறித்த நேரத்தில் கூடுதல் எதிர்வழக்குரையை தாக்கல் செய்ய இயலவில்லை.

**2.2** எதிர்மனுதாரர்கள் அவசரகதியில் வழக்கு விசாரணையை மேற்கொள்வதால் மனுதாரர்களின் நியாயமான காரணங்களை அனுமதிப்பது அவசியமாக உள்ளது. அதனால் இம்மனுவை அனுமதிக்காவிட்டால் மனுதாரர்களுக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே, கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளிக்க வேண்டி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. **எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம் :**

**3.1** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனு பொய் மற்றும் மோசடியான

ஒன்று அது சட்டப்படியும், பொருண்மைப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுவில் அசல் வழக்கு 16.02.2016ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு 04.08.2016ம் தேதியன்று பிரதிவாதிகளால் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் வா.சா.1 பகுதியாக குறுக்கு விசாரணை செய்யப்பட்டு மேலும் குறுக்கு விசாரணைக்காக 9.03.2026ம் தேதி வாய்தா போடப்பட்ட போது மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3.2** அசல் வழக்கில் வழக்கு விசாரணை தொடங்கி 1ம் வாதியை வா.சா.1 ஆக விசாரித்து பகுதி குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ள நிலையில், தகுந்த ஆவணங்கள் மற்றும் காரணங்கள் இன்றி மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கு வா.சா.1ன் மேலும் குறுக்கு விசாரணைக்காக நிலுவையில் உள்ளதால் அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் மனுதாரர்களால் இம்மனுவை தள்ளுபடி செய்யுமாறு எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**4.** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. இருதரப்பு வாதுரையும் கேட்கப்பட்டது.

**5.** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதிகள் யாதெனில்,
"மனுதாரர்கள் கோரிய படி மனுவை அனுமதிக்க வேண்டுமா?
என்பதேயாகும்".

**6. <u>தீர்வு</u> :**

**6.1** மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில்,

வா.சா.ஆ.5 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் தாவா சொத்தின் பங்குதாரர்கள் பற்றிய விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதாலும், அசல் வழக்கில் அவசியத்தரப்பினர்களை சேர்க்கப்பட்டுள்ளதாலும் மனுதாரர் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.2** எதிர்மனுதாரர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவரது வாதத்தில், அசல் வழக்கு 2016ம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்டு வா.சா.1ன் மேலும் குறுக்கு விசாரணைக்காக வாய்தா போடப்பட்டு நிலுவையில் உள்ள நிலையில், அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் எவ்வித தகுந்த காரணமும், ஆவணமும் இன்றி மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவை தள்ளுபடி செய்யுமாறு வாதிட்டார்.

**6.3** இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. மனு ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. அசல் வழக்கானது எதிர்மனுதாரர்/வாதியால் பாகப்பிரிவினை மற்றும் தனிசுவாதீன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு, எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 மற்றும் வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காக வாய்தா நிலுவையில் உள்ளது.

**6.4** அசல் வழக்கில் 21.01.2025ம் தேதி முதல் 21.03.2025ம் தேதி வரையில் மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய அனுமதி அளித்தும் அவர்களது தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யாத காரணத்தால், அவர்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பு முடிக்கப்பட்டு அசல் வழக்கில் மேல்நடவடிக்கை

தொடரப்பட்டுள்ளது. அதன் பிறகு மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட வா.சா.1 மற்றும் வா.சா.2ஐ குறுக்கு விசாரணை செய்வதற்காக அனுமதி கோரி இ.ம.எண்.52/2026 மற்றும் இ.ம.எண்.53/2026 தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டதன் தொடர்ச்சியாக 23.02.2026ம் தேதியன்று வா.சா.1ஐ பகுதியாக மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டு, மேலும் குறுக்கு விசாரணைக்காகவும், வா.சா.2ன் குறுக்கு விசாரணைக்காகவும் 9.3.2026ம் தேதியன்று வாய்தா போடப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**6.5** மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவில் கடந்த 21.03.2025ம் தேதியன்று கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்பதாலும், தகுந்த ஆவணங்கள் அவர்களுக்கு அச்சமயத்தில் கிடைக்கவில்லை என்பதாலும், அவர்களால் கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய இயலவில்லை என்று மட்டும் தான் குறிப்பிட்டுள்ளார்களே தவிர, ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள எந்த விபரத்தை விளக்கும் பொருட்டு கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்ய வேண்டும் என்பது குறித்து எவ்வித சங்கதியும் மனுவில் குறிப்பிடப்படவில்லை. எனவே, மனுதாரர் தகுந்த காரணங்களுடன் இம்மனுவை தாக்கல் செய்யாமல் அசல் வழக்கின் தீர்வை காலதாமதப்படுத்தும் நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக முடிவு செய்து, மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

**முடிவில்**, மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழை திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் நாள் அவையறிய பகரப்பட்டு, மேற்படி தேதியன்றே பதிவேற்றம் செய்யப்பட்டது.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.24 17:35:42 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்

<u>**இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :**</u> இல்லை.

A SUBASHRI

Digitally signed by A SUBASHRI
Date: 2026.03.24 17:35:47 +0530

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருப்பூர்